**செ. கு. எண்**:372 **நாள்**:20.10.12

# மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் அறிக்கை – 20.10.2012

தமிழகத்தில் வடகிழக்கு பருவமழை துவங்குவதற்கு முன்னரே, கனமழையிலிருந்து மக்களைக் காக்கும் வகையில், பாதுகாப்பு மற்றும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்குமாறு நான் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டிருந்தேன்.

இந்தச் சூழ்நிலையில், வங்கக் கடலில் உருவாகியுள்ள குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலை வலுப்பெற்று வருவதன் காரணமாகவும், வடகிழக்கு பருவமழை 19.10.2012 முதல் துவங்கியுள்ளதன் காரணமாகவும், கடந்த இரண்டு நாட்களாக (19.10.2012 மற்றும் 20.10.2012) தமிழகத்தில் கனமழை பெய்து வருவதால், இதிலிருந்து மக்களைக் காக்க எடுக்கப்பட்டு வரும் பாதுகாப்பு மற்றும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்தும், பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண உதவித் தொகைகள் வழங்குவது குறித்தும் விரிவான ஆய்வுக் கூட்டம் இன்று (20.10.2012) எனது தலைமையில் தலைமைச் செயலகத்தில் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில், மாண்புமிகு நிதி அமைச்சர், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர், மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர், தலைமைச் செயலாளர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் கூடுதல் தலைமைச் செயலாளர், வருவாய்த் துறை முதன்மைச் செயலாளர், நிதித் துறை முதன்மைச் செயலாளர், வருவாய் நிர்வாக ஆணையர் மற்றும் அரசு உயர் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

இந்தக் கூட்டத்தில், கடந்த சில நாட்களாக பெய்து வரும் கனமழை காரணமாக ஏற்பட்டுள்ள மனித உயிரிழப்புகள் குறித்தும், கால்நடை உயிரிழப்புகள் குறித்தும், சேதமடைந்துள்ள வீடுகள் பற்றியும் விரிவாக விவாதிக்கப்பட்டது.

கடந்த இரண்டு நாட்களாக பெய்து வரும் கனமழை காரணமாக மின்சாரம் தாக்கியும், இடி மற்றும் மின்னல் தாக்கியும் **20** நபர்கள் இதுவரை உயிரிழந்துள்ளனர். இவ்வாறு உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு தலா 2 லட்சத்து 50 ஆயிரம் ரூபாய் உதவித் தொகையை உடனடியாக வழங்க நான் ஆணையிட்டுள்ளேன்.

இந்தப் பெருமழைக்கு இதுவரை 38 குடிசை வீடுகள் முழுமையாகவும், 123 குடிசை வீடுகள் பகுதியாகவும் சேதமடைந்துள்ளன. முழுமையாக சேதமடைந்த குடிசை வீடுகளுக்கு நிவாரணத் தொகையாக 5,000 ரூபாய் வழங்கவும், பகுதி சேதமடைந்த வீடுகளுக்கு நிவாரணத் தொகையாக 2,500 ரூபாய் வழங்கவும் நான் உத்தரவிட்டுள்ளேன். இது தவிர, முழுமையாக வீடுகளை இழந்த குடும்பங்களுக்கு 10 கிலோ அரிசி, ஒரு வேட்டி, ஒரு சேலை மற்றும் ஒரு லிட்டர் மண்ணெண்ணெய் வழங்கவும் நான் ஆணையிட்டுள்ளேன்.

இந்த பெருமழைக்கு இதுவரை 112 கால்நடைகள் பலியாகியுள்ளன. மாடுகளை இழந்த உரிமையாளர்களுக்கு 20,000 ரூபாய் நிவாரணத் தொகையும், ஆடுகளை இழந்த உரிமையாளர்களுக்கு 2,000 ரூபாய் நிவாரணத் தொகையும், கோழிகளை இழந்த உரிமையாளர்களுக்கு 100 ரூபாய் நிவாரணத் தொகையும் வழங்க நான் ஆணையிட்டுள்ளேன்.

சாலைகள் மற்றும் சுரங்கப் பாதைகளில் தேங்கியுள்ள வெள்ள நீரை உடனுக்குடன் அகற்றும்படியும் நான் அரசு அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளேன்.

வடகிழக்கு பருவமழை இந்த ஆண்டு இறுதி வரை நீடிக்க வாய்ப்புள்ளதால், வாரம் ஒரு முறை மாண்புமிகு அமைச்சர்கள் மற்றும் அரசு உயர் அதிகாரிகள் மாவட்டங்களுக்குச் சென்று அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்களுடன் ஆலோசனை நடத்தி, பாதுகாப்பு மற்றும் நிவாரணப் பணிகள் குறித்து ஆய்வு நடத்துமாறும் நான் அறிவுறுத்தியுள்ளேன்.

தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களிலும் பாதுகாப்பு மற்றும் நிவாரணப் பணிகளை போர்க்கால அடிப்படையில் மேற்கொள்ளும் வகையில் மாவட்ட நிர்வாகங்கள் முடுக்கிவிடப்பட்டுள்ளன. எதையும் எதிர்கொள்ளும் வகையில் அரசு இயந்திரம் தயாராக உள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு:**
**இயக்குநர், செய்தி – மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**